**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 34** **நாள்: 09.04.2024**

**சென்னை மாவட்டத்தில் வாக்குப்பதிவு மையங்களில் பணிபுரியவுள்ள காவல் பணியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்கள் வாக்குச்சாவடிகளின் வாரியாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் வாக்குப்பதிவு மையங்களில் பணிபுரியவுள்ள காவல் பணியாளர்கள் மற்றும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள நுண் பார்வையாளர்கள் ஆகியோரை வாக்குச்சாவடிகளின் வாரியாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (09.04.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கூடுதல் காவல் ஆணையாளர் (தலைமையிடம்) திரு.கபில் குமார் சி. சரட்கர், இ.கா.ப., (Mr. Kapil Kumar C Saratkar, IPS.,) தேர்தல் பொது பார்வையாளர்கள் டாக்டர் டி. சுரேஷ், இ.ஆ.ப., (Dr.D. Suresh, I.A.S.,) திரு. கார்த்திகே தன்ஜி புத்தப்பாட்டி, இ.ஆ.ப., (Mr.Kartikay Dhanji Budhdhabhatti, I.A.S.,) திரு. முத்தாடா ரவிச்சந்திரா, இ.ஆ.ப., (Mr. Muddada Ravichandra, I.A.S.,) தேர்தல் காவல் பார்வையாளர்கள் திரு. உதய் பாஸ்கர் பில்லா, இ.கா.ப., (Mr. Uday Bhaskar Billa, IPS.,), திரு. சஞ்சய் பாட்டியா, இ.கா.ப., (Mr. Sanjay Bhatia, IPS.,), கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., (சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்), திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., (கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., (கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்)), டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (பணிகள்)), திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (கல்வி) மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது :**

தேர்தல் பொது பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர்களின் முன்னிலையில் காவல்துறை பணியாளர்களை சட்டமன்றத் தொகுதிகளின் வாரியாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி முதற்கட்டமாக நடைபெற்றது. பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்ட வாக்குச்சாவடிகளில் தேர்தல் பார்வையாளர்களின் நேரடி கண்காணிப்பில்

பணிபுரியவுள்ள நுண் பார்வையாளர்களை கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி நடைபெற்றது.

நுண் பார்வையாளர்கள் 923 நபர்கள் பணியில் ஈடுபடவுள்ளனர். காவல் பணிகளில் 5 வாக்குச்சாவடிகள் உள்ள மையத்திற்கு ஒரு காவலர், 5க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகள் உள்ள மையத்திற்கு 2 காவலர்கள் என மொத்தம் 9,277 காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், வாக்குச்சாவடி பணியாளர்களில் 20% முன்னிருப்பு (Reserve) உட்பட 19,419 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 19,097 பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் 611 பதற்றமான (Vulnerable) வாக்குச்சாவடிகள், 23 சவாலான (Critical) வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், கூடுதல் பாதுகாப்பு தேவைப்படும் 10 வாக்குச்சாவடிகளுக்கு மேலுள்ள 135 வாக்குச்சாவடிகள் என மொத்தம் 769 வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடிகளுக்கான நுண் பார்வையாளர்கள் 963 நபர்கள் கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வாக்காளர் தகவல் சீட்டுகள் இதுநாள் வரை 11,56,524 வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களில் நேற்று (08.04.2024) 82 நபர்கள் தங்கள் இல்லங்களில் வாக்களித்துள்ளனர். 67 வாக்குப்பதிவு குழுக்கள் மூலம் வீடுவீடாகச் சென்று வாக்குப்பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**